www.padippakam.com



# 18.02.1833 வரலாற்றில் மறக்க முடியாத நாள்




**பிரித்தானிய காலனித்துவ நலன் என்ற அடிப்படையில் இலங்கை மக்களின் தலைவிதியை தீர்மானிக்க எந்த விதத்திலும் உரிமை இல்லாத ஆங்கிலேய அரசு 1833-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி 2000 வருடங்களுக்கு மேலாக இருந்துவந்த மக்களின் ஆட்சி உரிமைகளை, மரபுகளை தேசிய இன அடையாளக் கூறுகளை தயவு தாட்சண்யமின்றி நசுக்கி அழித்து 'ஒற்றையாட்சி இலங்கை' அதாவது CEYLON என்ற ஒரு புதிய செயற்கையான சிறைக்கூட்டுக்குள் அடைத்தது.**

50

பண்டாரவன்னியனை வீழ்த்தியதோடு கண்டிய மன்னன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனையும் தங்களது பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டு வீழ்த்திய ஆங்கிலேயர்கள் கி.பி. 1815-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் திகதி கண்டிய சரணாகதி ஒப்பந்தத்தில் கண்டியப் பிரதானிகளைக் கையொப்பமிட வைத்ததன் மூலம் இலங்கையில் இருந்த கடைசி மன்னராட்சிக்கும் முடிவு கட்டினார்கள்.

1815-ம் ஆண்டு இலங்கைத்தீவு முழுவதும் அவர்களது கைகளில் வந்தபோதும், உடனடியாக அவர்கள் தீவின் எல்லாப் பகுதிகளையும் ஒரே நிர்வாக அலகின் கீழ் ஒன்றிணைக்கவில்லை.

அக்கால கட்டத்தில் யாழ்ப்பாணமும் வன்னியும் ஒரு நிர்வாக அலகின் கீழும், கோட்டை இராச்சியத்தின் நிர்வாகத்திலிருந்த கொழும்பு, காலி, மாத்தறை உட்பட்ட தென்கரையோரப் பகுதி தனி நிர்வாக அலகாகவும் கண்டி இராச்சியத்துக்குட்பட்ட மத்திய மலைப்பகுதி இன்னொரு தனி நிர்வாக அலகாகவுமே நிர்வகிக்கப்பட்டு வந்தன. அக் காலகட்டத்தில் இலங்கைத்தீவு முழுவதும் தமிழர்கள், கண்டியச் சிங்களவர்கள், கரையோரச் சிங்களவர்கள் என்று மூன்று இனக் குழுக்கள் இருந்தன. இந்த மூன்று குழுக்களில் கண்டியச் சிங்களவர்களுக்கும், கரையோரச் சிங்களவர்களுக்கும் இடையில் இருந்த முரண்பாடானது தமிழர்களுடன் இரு பகுதியினருக்கும் இருந்த முரண்பாட்டைவிட அதிகமாகவே இருந்தது.

பௌத்த சிங்கள மதவாதிகள் மட்டும் அக் காலகட்டத்தில் தீவிரமாக தமிழ் எதிர்ப்பைக் கொண்டிருந்தனர். கண்டிய சிங்களப் பிரதானிகளில் பெரும் பகுதியினர் தமிழர்களுடன் இரத்தக் கலப்புடையவர்களாக இருந்தனர். கண்டியின் அரசமொழியாக தமிழ் விளங்கியது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இத்தகைய சூழ்நிலையில் மூன்று நிர்வாகப் பிரிவுகளையும், அதாவது தனித்தனியான மூன்று இராச்சியங்களையும் ஒன்றாக இணைந்து ஒரே நிர்வாக அலகின் கீழ் ஒரே நாடாக ஆக்க முற்பட்டால் மூவரும் தங்களுக்குள்ள முரண்பாடுகளை மறந்து தமக்கு எதிராக கிளர்ந்தெழுவதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும் என்று ஆங்கிலேயர்கள் அஞ்சினார்கள்.

எனவே மூன்று பிரிவினரும் எந்தவிதத்திலும் ஒருவருக்கொருவர் ஒன்று சேர்ந்துவிடாதபடி முரண்பாடுகளை வளர்த்து விடுவதற்குத் தீர்மானித்தார்கள்.

இதற்கென யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிக அளவுக்கு கிறிஸ்தவ தேவாலயங்களையும், கல்லூரிகளையும் நிரவி ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, அங்கு தங்களுக்கு விசுவாசமான கனவான்கள் கூட்டமொன்றை உருவாக்க முனைந்தனர். கரையோரச் சிங்களவர்களுக்கு சாராயக்குத்தகை, மீன்பிடிக்குத்தகை உரிமை முதலானவற்றை வழங்கி அவர்களை கண்டிய சிங்கள நிலப் பிரிவுகளை விட பொருளாதார நிலையில் உயர்ந்தவர்களாக்கும் முயற்சிக்கு ஊக்கம் கொடுத்ததோடு, கொழும்பு, காலி, மாத்தறை முதலான இடங்களில் யாழ்ப்பாணத்தைப்போல் கல்லூரிகளையும் நிறுவி அங்கும் ஒரு கனவான்கள் கூட்டத்தை உருவாக்க முயன்றனர்.

யாழ்ப்பாணத்தோடு ஒப்பிடும்போது கரையோரச் சிங்களப்பகுதிகளில் நிறுவப்பட்ட கல்லூரிகளின் , எண்ணிக்கை குறைவு ஆனால், அதேநேரம் கரையோர சிங்களவர்களுக்கு வழங்கப்பட்ட 'பொருளாதார மேன்மை அந்தஸ்த்து' முதலில் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை. அதாவது எந்த விதத்திலும் எல்லோருக்கும் சமத்துவமான உரிமைகளை அனுபவிக்காதபடி அவர்கள் பார்த்துக் கொண்டார்கள்.

கண்டியச் சிங்களவர்களைப் பொறுத்தவரை ஆரம்பகாலத்தில் அவர்களை மற்றவர்களிடமிருந்து தனிமைப் படுத்துவதன் மூலம் அவர்களை பழிவாங்கவே ஆங்கிலேயர்கள் நினைத்தனர்.

இராஜசிங்கன் காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு அவனை வீழ்த்த உதவி செய்த கண்டிய சிங்களப் பிரதானிகள் இராஜசிங்கனை அகற்றியவுடன் கண்டிய மகுடத்தை ஆங்கிலேயர்கள் தங்களுக்கே சூட்டுவார்கள் என்று நினைத்து ஏமாந்து போனார்கள். காரியம் முடிந்ததும் தாங்கள் தூக்கியெறியப்பட்டு விட்டோம் என்பதை அறிந்த அவர்கள் 1818-ம் ஆண்டு கெப்பிட்டிபொலவின் தலைமையில் பாரிய எதிர்ப்புக் கலகம் ஒன்றை நடத்தினார்கள்.

பெரிய இழப்பு எதுவுமின்றி இந்தக்கலவரம் சுலபமாக அடக்கப்பட்டது. கண்டிய சிங்களவர்கள் தொடர்ந்தும் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆங்கிலேய அரசு அப்போது இலங்கைக்கு தேசாதிபதியாக இருந்த 'றொபேட் பிரௌன்றி'க்கு உத்தரவிட்டது. அத்துடன் இலங்கையிலுள்ள பழைய நிர்வாகப் பிரிவுகள் எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டு தமது ஆட்சிக்கு நன்மை தரக்கூடிய விதத்தில் புதிய நிர்வாகப்பிரிவு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பதற்கு எம். ஜீ. கோல்புறுக் என்பவரின் தலைமையில் ஒரு ஆணைக் குழுவையும் அனுப்பி வைத்தது.

## கோல்புறுக் ஆணைக்குழு

இலங்கைத் தீவிலுள்ள தனித்தனி ஆட்சி முறைகள் யாவும் அகற்றப்பட்டு இலங்கை ஒரே ஆட்சி முறையின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். தமிழருக்கும் சிங்களவருக்கும் ஒரே மாதிரியான சட்டங்கள் இருக்க வேண்டும். (அதற்கு முன் தமிழருக்குகென தேசவழமைச் சட்டம் உட்பட தனியான சட்டங்கள் இருந்தன.) பிரித்தானிய ஆட்சிமுறை அமுல்படுத்தப்படவேண்டும் என்று சிபார்சு செய்தது.

தாம் வருவதற்கு முன்பு, சிங்களவர்கள் கையாண்டுவந்த இராசகாரிய முறையிலான வரிமுறையும் தமிழர்கள் கடைப்பிடித்துவந்த தலைவரி முறையும் நீக்கிவிட்டு பிரித்தானிய முறையிலான வரிமுறை அமுல் செய்யப்பட வேண்டும் என்றும் சிபார்சு செய்யப்பட்டது.

பெரும்பாலான தமிழ் மக்களினதோ சிங்கள மக்களினதோ அல்லது தமிழ் சிங்கள அரச பிரதிநிதிகளினதோ விருப்பத்தின்படி அல்லாமல் தங்களுடைய பிரித்தானிய காலனித்துவ நலன் என்ற அடிப்படையில் இலங்கை மக்களின் (அவர்கள் சிங்களவர்களாக இருந்தாலும் தமிழர்களாக இருந்தாலும் சரி) தலைவிதியை தீர்மானிக்க எந்த விதத்திலும் உரிமை இல்லாத ஆங்கிலேய அரசு 1833-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி 2000 வருடங்களுக்கு மேலாக இருந்துவந்த மக்களின் ஆட்சி உரிமைகளை, மரபுகளை தேசிய இன அடையாளக் கூறுகளை தயவு தாட்சண்யமின்றி நசுக்கி அழித்து 'ஒற்றையாட்சி இலங்கை' அதாவது CEYLON என்ற ஒரு புதிய செயற்கையான சிறைக்கூட்டுக்குள் அடைத்தது.

இவ்வாறு ஒற்றையாட்சி இலங்கை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டபோது, இலங்கை மக்கள் எவருக்கும் வாக்குரிமை வழங்கப்படவில்லை. பரந்துபட்ட மக்களின் விருப்பமும் அறியப்படவில்லை. ஆட்டிடையர்கள், பல்வேறு பட்டிகளில் அடைக்கப்பட்டிருக்கும் ஆடுகளை தங்களது மேய்ப்பு வசதிக்காக ஒரே பட்டிக்குள் அடைப்பதைப் போலவே இலங்கையில் இருந்த தமிழர்களும் சிங்களவர்களும், `Ceylon' என்ற பட்டிக்குள் ஒன்றாக அடைக்கப்பட்டார்கள்.

இலங்கை வரலாற்றை எழுதிய ஆங்கிலேயர்களும் சரி, அவர்களது எஜமான விசுவாசத்தை மறவாத சிங்கள _தமிழ் வரலாற்றாசிரியர்களும் சரி, இலங்கைக்கு ஒற்றையாட்சி முறையை சிபாரிசு செய்த கோல்புறூக், மக்களின் கருத்தை அறிந்து அதன்படியே, அந்த அமைப்பை சிபாரிசு செய்தார் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் உண்மையில் கோல்புறூக் ஆணைக்குழு, இலங்கையில் எவ்வாறு ஆங்கிலேய அரசின் நலன்களையும் அதன் இருத்தலையும் உறுதிப்படுத்தலாம் என்பதைப் பற்றித்தான் ஆராய்ந்ததே தவிர, இலங்கை மக்களுக்கு, அவர்களின் எதிர்கால நலனுக்கு எந்த அமைப்பு உகந்ததாக இருக்கும் என்பது பற்றி ஒருபோதும் கருத்தறிய முற்படவில்லை.

அவர் கருத்தறிந்த தமிழ் சிங்களக் கனவான்கள், அவர்களால் வீசி எறியப்பட்ட 'சேர்' பட்டத்துக்காக அவர்களது காலடியில் காத்துக் கிடந்தவர்களே.

**- நக்கீரன்**

படிப்பகம்